## அத்தியாயம் ஒன்பது

# "உலர்ந்த எலும்புகள்"

தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவனுடைய வசனங்களைப் பிரசங்கித்துள்ள அநேக போதகர்கள், அநேக மக்கள் படுகொலை செய்யப்பட்ட வயல்கள் என்று நம்பப்பட்ட ஒரு கல்லறை தோட்டத்தில் எரேமியா பிரசங்கித்த ஒரு பிரசங்கத்தை விரும்புகின்றனர். எசேக்கியேல் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்குக்கு வெளியே கொண்டுபோகப்பபட்டார் என்று நாம் வாசிக்கிறோம் (அதிகாரம் 37). இந்த எலும்புகளுக்கு பிரசங்கிக்க வேண்டுமென்று தேவனிடமிருந்து எசேக்கியேலுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது.

உலர்ந்த எலும்புகளுக்கு பிரசங்கிப்பதற்கான கர்த்தருடைய கட்டளைக்கு எசேக்கியா கீழ்ப்படிந்தபொழுது, "அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன். அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்" (37:3-5) என்று சொன்னார்.

யூதா மக்கள் உலர்ந்த எலும்புகளைப் போலிருந்தார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு முன்பாக தேவன் வைத்த சவால், "இந்த உலர்ந்த எலும்புகள் உயிர் பெறமுடியும் என்று நீ நினைக்கிறாயா?" என்பதே. வேதவாக்கியங்களில், தேவன் தீர்க்கதரிசியின் தரிசனங்களுக்குத் திடமாக சவாலிட்டார். எசேக்கியேல் "ஆம், அவைகள் உயிர்பெற முடியும் என்பதை விசுவாசிக்க எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக

அவர், "கர்த்தாவே, உமக்கு மட்டுமே தெரியும்" என்று பதிலளித்தார். எலும்புகள் உயிர்பெறும் என்று மெய்யாகவே அவர் விசுவாசிக்கவில்லை என்பதால் தீர்க்கதரிசி தேவனுக்கு அப்படி வாக்குக் கொடுக்கவில்லை. அப்பொழுது தேவன் அவரிடம், "எலும்புகளுக்குப் பிரசங்கம் செய்!" என்றார்.

எனவே, எசேக்கியேல் எலும்புகளுக்குப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரத்தில் இரைச்சல் உண்டாகி, ஒரு சலசலப்பு சத்தம் கேட்டு, எலும்புகள் ஒன்றோடொன்று சேர்ந்து கொண்டன என்று எசேக்கியேல் சொல்லுகிறார். உலர்ந்த எலும்புகள் ஒன்றாகச் சேர்ந்தபின், எசேக்கியேலிடம் எலும்புக்கூடுகளின் கூட்டம், நரம்பும் மாம்சமுமில்லாமல் இருந்தன. "பிரசங்கி!" என்று எசேக்கியேலுக்கு மறுபடியும் கட்டளையிடப்பட்டது. அவர் பிரசங்கித்தபோது நரம்பும் மாம்சமும் அவைகளை மூடிற்று.

எசேக்கியேல் மாம்சத்தோடும் தசையினாலும் மூடப்பட்ட எலும்புக்கூட்டுப் படைகளோடு இருந்தபோதிலும், தேவனுடைய கேள்விக்கு அவன் இன்னும் பதிலளிக்கவில்லை, "இந்த எலும்புகள் மறுபடியும் உயிர்பெற முடியுமா?" இந்த உயிரற்ற உடல்கள் இன்னும் உயிர்பெறவில்லை. அவைகளுக்குச் சுவாசமில்லை. எனவே தேவனிடமிருந்து கட்டளை வந்தது, "சுவாசத்தை நோக்கிப் பிரசங்கம் செய்!" வேதாகமத்தில், காற்று, சுவாசம், ஆவி ஆகியவைகளைக் குறிப்பிடுவது ஒரே வார்த்தையே. சுவாசம் என்பது இங்கே பரிசுத்த ஆவியைக் குறிப்பிடுகிறது. வேதாகமம் முழுவதிலும் இந்தப் பெரிய தத்துவத்தை நீங்கள் காண்பீர்கள்: பரிசுத்த ஆவி இல்லாமல் பிரசங்கி முடியாத ஒரு காரியத்தை முயற்சி செய்கிறார்.

எசேக்கியேல் ஆவிகளுக்குப் பிரசங்கித்ததும், அந்தச் சடலங்களுக்குள் சுவாசம் வந்து, அவர்கள் ஒரு பெரிய சேனையாக மாறினார்கள்.

எசேக்கியேல் யூதர்களுக்குப்பிரசங்கிக்கும்படி கட்டளையிடப் பட்டதின் அடிப்படைச் செயல்திட்டத்தின் சுருக்கம் இது, "உங்கள் சிறையிருப்பு அனுபவத்திலிருந்து உங்களை மீட்க என்னால் முடியும், நான் மீட்பேன். பாபிலோனிலிருந்து உங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பவும் கொண்டுவர என்னால் முடியும், நான் அப்படிச் செய்வேன். இஸ்ரவேலின் செல்வங்களை அவர்களுக்குத் திரும்பவும் கொடுப்பேன்."

இந்தப் பெரிய செய்தியின் இரண்டாம் செயல்திட்டம், இன்று சபையைக் கட்டியெழுப்பும் பெரிய ஊழியத்தின் ஒரு காட்சியை நமக்குக் கொடுக்கிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது சபையைக் கட்டியெழுப்புகிறது. உலர்ந்த எலும்புகள் தொலைந்து போனவர்களைக்

குறிப்பிடுகின்றன. இன்று பூமியில் வசிக்கும் 600 கோடி மக்களுக்கும் அதிகமானவர்களில் எத்தனை மக்களுக்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றித் தெரியும்? எத்தனை பேர் இயேசு கிறிஸ்துவோடு உயிரோடிருக்கிறார்கள்? பரிசுத்த ஆவியானவரோடு வாழ்வதைப்பற்றியும் தேவ ஆவியினால் மாற்றப்படுவதைப் பற்றியும் அவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? மிகக் குறைந்தவர்களுக்கே. இன்றைய சபையை எதிர்நோக்கியிருக்கும் சவால் இதுதான். எசேக்கியேலின் உலர்ந்த எலும்புகள் பிரசங்கத்தின் முக்கிய சவால் இதுதான்: இயேசு கிறிஸ்துவின் சபை, பரிசுத்த ஆவியானவரால் வல்லமையளிக்கப்பட்டு இந்த உலகில் தொலைந்துபோன மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் கட்டளையை செயல்படுத்த முடியுமா?

நீ உலர்ந்த எலும்புகளில் ஒன்றாயிருக்கிறாயா? இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒருபொழுதும் கேட்காமலும் விசுவாசிக்காமலுமிருந்ததால் நீ இழந்துவிட்டாயா? உன்னுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தேவ ஆவியானவரின் சுவாசம் உனக்கிருக்கிறா? உங்களுடைய சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், ஒவ்வொரு நாள் காலையிலும் எசேக்கியா எழுந்தபோதிருந்த அவ்வளவு கடினமான சூழ்நிலைகளைப் போலிருக்க முடியாது. எசேக்கியேலுக்காக உலர்ந்த எலும்புகளை உயிருள்ளவைகளாக்க தேவனால் முடியுமென்றால் உங்களுக்கும் எனக்கும் அதை செய்ய அவரால் செய்யமுடியும்.

ஆவியானவர் உங்களில் வாழ்ந்திருந்தால், சபையைக் கட்டியெழுப்ப நீ என்ன செய்யப் போகிறாய்? மற்றவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள நீ ஒரு பிரசங்கியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தேவனுடைய வசனங்களை மற்றொருவருடன் பகிர்ந்து கொள்ளும்போது தேவ ஆவியானவர் உன்னை அபிஷேகம் செய்வார் என்று நீ விசுவாசிக்க வேண்டும். ஒரு நற்செய்தி பணியாளர் என்பவர் ஒரு பிச்சையெடுப்பவன் மற்றொரு பிச்சையெடுப்பவனிடம், ரொட்டி எங்கே கிடைக்கும் என்று சொல்லுபவன் என்று சொல்லப்பட்டது. ஆவிக்குரிய பிரகாரமாய் பேசும்போது நீ அப்படிப்பட்ட ஒரு பிச்சைக்காரனாய் இருந்தால், ஜெபம், வேத வசனங்கலைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றின் வல்லமையான இணைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் இரண்டாவது அதிகாரத்தில், சீஷர்கள் ஒன்றாகக் கூடி மிகப்பெரிய ஆவிக்குரிய சமுதாயமாய் வாழ்ந்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். தங்கள் ஆஸ்திகளைப் பங்கிட்டு தங்கள் உணவை ஒன்றாக உண்டனர். அவர்கள் தூய்மையான பொதுவுடைமைத் தத்துவத்தைச் செயல்படுத்தினார்கள்.